எம்.எஸ்.எம். நஜாத் **M.S.M.Najath**
பீடம்:- முகாமைத்துவமும் நிதியியலூம்
**Faculty of Management & Finance**

## இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கான கல்வி...!

வளர்ந்து வரும் இன்றைய யுகத்தில் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதும் அனுபவிப்பதுமே எல்லா உலக நாடுகளினதும் ஒட்டுமொத்த அபிலாசையாக இருக்கின்றது. ஆரம்பகாலப் பகுதியில் பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஒரே கருத்திலான எண்ணக்கரு என்ற கருத்து காணப்பட்டது. எனினும் உலக நாடுகளின் அனுபவங்கள் இதற்கு மாறாகக் காணப்பட்டதனால் இக் கோட்பாடு பொய்ப்பிக்கப்பட்டு புதியதொரு சிந்தனையின் தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டது. உண்மையில் "அபிவிருத்தி" என்பது பொருளாதார வளர்ச்சியுடன் வேலையின்மை குறைவடைந்து, வறுமை குறைவடைந்து, வருமானச்சமமின்மை குறைவடைந்து செல்வதையே குறித்து நிற்கின்றது.

இவ்வாறான அபிவிருத்தி உண்மையான அபிவிருத்தியா? என்ற வினா எம்முள் எழக் கூடும். ஏனெனில் இருக்கின்ற வளங்களை நிகழ்கால சந்ததி உச்ச அளவில் பயன்படுத்தி அபிவிருத்தியினை அடையுமாயின் அதற்கப்பால் பக்க விளைவுகள் ஏதேனும் இல்லையா? என்ற வினா எழுவது நியாயமானதே. அதாவது அதிகரித்த சனத்தொகையுடன் இணைந்து அதிகரித்த வளப்பயன்பாடு இடம்பெறும் போது வேகமான வளங்களின் தேய்வு, சூழல் மாசடைதல் போன்ற இடர்கள் ஏற்படக்கூடும். இப்பிண்ணனியில் இயற்கை வளங்களின் அளவும் தரமும் பாதிக்கப்படக்கூடும். எனவே இத்தகைய நிலைமைகளின் கீழ் புதிய சிந்தனை ஒன்றின் தேவைப்பாடு எழுகின்றது. அதாவது இப்பிரச்சினைகளின் மத்தியில் அபிவிருத்தி நிலைத்து நிற்குமா? அல்லது அபிவிருத்தியை நிலைத்து நிற்க செய்ய உலகம் தழுவிய விதத்தில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்? என்பதாகும். ஆகவே தான் இன்று புதிய சிந்தனையான நிலையான அபிவிருத்தி அல்லது பேண்தகு அபிவிருத்தி என்பது முக்கியப்படுத்தப்படும், உலகம் தழுவிய விதத்தில் பேசப்படும்இ விவாதிக்கப்படும் ஒரு காத்திரமான விடயமாக நோக்கப்படுகின்றது.

உலக விவசாய ஸ்தாபனம் நிலையான அபிவிருத்தி என்பது "இயற்கை வளங்களின் அடிப்படை முகாமைத்துவத்தையும் நிகழ்கால எதிர்கால

சந்ததியினரின் தேவைகள் அவற்றின் கிடைப்பனவுகளை நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் தொழில்நுட்ப ரீதியான மாற்றங்களை நெறிப்படுத்துவதாகும்” என வரைவிலக்கணம் செய்கின்றது. மாறாக சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான உலக ஆணைக்குழுவின் அறிக்கை நிலையான அபிவிருத்திக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் வழங்குகின்றது. “எதிர்கால சந்ததியினரின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய ஆற்றலின் மீது தாக்கமெதனையும் எடுத்து வராமல் நிகழ்கால சந்ததியினரின் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் அபிருத்தி செயன்முறை” எனப்படுகின்றது.

நிலையான அபிவிருத்தி எனும் போது அது வெறுமனே பொருளாதார அபிவிருத்தியுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. மாறாக சூழல் சார் சமூக அரசியல் மற்றும் கலாசாரம் சார் அபிவிருத்தியாக கருதப்படுகின்றது. நிலையான அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கரு 1987 ல் புருட்லாண்ட் அறிக்கையில் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. நிலையான அபிவிருத்தி ஆனது பல சூழற் பொருட்களை கொண்டு கட்டியெழுப்பப்பட்டதாகும். உதாரணமாக வறுமைக் குறைப்பு, உணவு, பாதுகாப்பு, நீர் வளங்கள், நிலையான நகரங்கள் மற்றும் மனிதக் குடியிருப்புக்கள், நிலையான எரிபொருட்கள் என்பவற்றை கூறலாம். சுருக்கமாகக் கூறின் மனித வளங்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தல் வறுமையினை ஒழித்தல் சுற்றுச்சூழலைப் பாதுகாத்துக் கொண்டு உற்பத்தி நடவடிக்கையினை அதிகரித்துக் கொள்ளல் என்பவற்றின் கூட்டே நிலை பேண் அபிவிருத்தி எனலாம்.

இலங்கையைப் பொருத்த மட்டில் ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருப்பதுடனஇ ஆசியாவின் அதிசயமாக மாறக்காத்திருக்கும் ஒரு நாடாகும். எனவே இத்தகைய நாடு தனது நோக்கங்களை நிலையாக அடைந்துக்கொள்ள நிலைப்பேண் அபிவிருத்தியானது பெரிதும் உதவும். இன்று இலங்கையின் சனத்தொகையானது ஆரம்பக்காலங்களை விட பல மடங்கு அதிகரித்து வருகின்றது. 2001 இல் “.. ஆகக் காணப்பட்ட சனத்தொகை 2012 இல் ”.. ஆக அதிகரித்துள்ளது. இச்சனத்தொகைக்குத் தேவையான உணவு சேவை மற்றும் நுகர்வுப் பொருட்களின் தேவையினை வழங்குவதிலுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திப் பற்றிய எண்ணக்கரு ஒரு சிறந்த உத்தியாக உள்ளது. மேலும் சனத்தொகை அதிகரிப்பினால் காடுகள் அழிக்கப்படுவதுடன் கழிவுகளினால் சுற்றுப்புறம் மாசடைதல் முதலிய சூழல்

மாசடைவுகள் ஏற்படுகின்றன. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி கொள்கையினால் சூழல் மாசடைவு கட்டுப்படுத்தப்படும். அத்துடன் முறையற்ற சூழல் முகாமைத்துவம் மற்றும் உயர் தொழிநுட்பப் பாவணையின்மை என்பவற்றினால் ஏற்படும் பௌதீக இடர்களை இழிவளவாக்கவும் தடுக்கவும் எதிர்காலத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வகையிலான அபிவிருத்தியினை ஏற்படுத்தவும் இந்நிலைப்பேண் அபிவிருத்தி இலங்கைக்கு தேவையாக உள்ளது.

இந்நிலையான அபிவிருத்தியினை அடையப்பெறுவதில் வளர்முக நாடான இலங்கை பல சவால்களை எதிர்நோக்குகின்றது. போதிய தொழிநுட்ப அறிவின்மை மூளைசாலிகளின் வெளியேற்றம் மூலதனப்பற்றாக்குறை திறன்மிக்க ஊழியப்படைகளின் குறைவு போன்ற பலக்காரணிகள் இதில் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆயினும் இந்நிலையான அபிவிருத்தியினை நிலையாக அடைந்துக் கொள்ள அடித்தளமிடும் அடிப்படைக் கருவி கல்வியாகும்.

கல்வி என்பது ஒரு புதிய எண்ணக்கரு அல்ல. கல்வியின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அறிவானது எப்பொழுதும் எந்தவொரு நாட்டினதும் அபிவிருத்தி செயன்முறையின் மையமாக இருந்துள்ளது இருந்து வருகின்றது. மிக அண்மைக் காலத்தில் அறிவு உருவாக்கம் மற்றும் அதன் பரவும் தன்மை என்பவற்றின் வேகம் அதிகரித்துள்ளதால் அது நிலையான அபிவிருத்தியில் மிக முக்கியம் பெற்று வருகின்றது. நிலைப்பேண் அபிவிருதிக்கான கல்வி என்பது நிலையான எதிர்காலம் ஒன்றினை கட்டியெழுப்புவதற்கான அறிவுஇ திறமைஇ பண்புகள் என்பனவற்றினை வழங்குவதாக உள்ளது. மேலும் மாணவர்களை நிலையான அபிவிருத்திக்கான செயன்முறைகளை எடுக்கவும்இ அதற்காக தமது நடத்தைகளை மாற்றிக்கொள்ளவும்இ நிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்தத் தேவையான முறைமைகளைக் கற்றுக்கொள்ளவும் இக்கல்வி உதவுகின்றது. மேலும் ஆக்கப்பூர்வமான சிந்தனைஇ எதிர்காலத்திட்டமிடல் மற்றும் கூட்டாக முடிவெடுக்கும் திறன் என்பதனையும் வளர்ப்பதாக உள்ளது. ஆரம்பத்தில் பிரதான உற்பத்திக்காரணிகளான நிலம்இ இயற்கை வளம்இ உழைப்புஇ முதல் என்பன காணப்பட்டன. ஆயினும் இன்று அறிவு என்பதுக் கிடைக்கக் கூடியதாக இருப்பின் இவ்வளங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. மேலும் நிலையான அபிவிருத்தியினைப் பெற்றுக் கொள்ள பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் கல்வி அறிவுள்ள மக்களின் பங்கேற்பு அவசியம்.

அத்துடன் அபிவிருத்தியினை நோக்கிய துரிதச் செயற்பாட்டின் போது உயர் அளவிலான இயந்திரமயமாக்கம் என்பது தவிர்க்க முடியயாத ஒன்று. இவ்வாறு உயர் அளவில் இயந்திரமயப்பட்டிருக்கும் உற்பத்தி செயன்துறைக்கூடாக இயற்கை வளங்களின் மிதமிஞ்சிய நுகர்வு சுற்றுச் சூழல் மாசடைவு என்பன ஏற்படுகின்றன. நிலைப்பேண் அபிவிருத்தியின் பிரதான இலக்குகளுள் ஒன்றாக விளங்கும் இது முறையான சூழலியற் கல்வியினால் அடையப்பெற முடியும். இவ்வாறு நிலையான அபிவிருத்தி என்ற எண்ணக்கரு மூலம் அடைந்துக்கொள்ள எதிர்ப்பார்க்கப்படும் அடைவுகளிற்கான அத்திவாரம் கல்வியின் மூலம் மட்டுமே உறுதியாகப் போடப்பட முடியும். இத்தகைய நிலைப்பேண் அபிவிருத்திக்கான கல்வியினை முன்னெடுத்து செல்லும் முக்கிய முகவராக ஐ.நா சபையின் யுனெஸ்கோ விளங்குகின்றது.

நிலையான அபிவிருத்தியினை அனுபவிக்கக் காத்திருக்கும் இலங்கையானது அதனை அடைய தனது கல்விக்கான கொள்கையில் மாற்றங்களையும் விருத்தியினையும் செய்ய வேண்டியுள்ளது. கல்வி முறை வெற்றிகரமாக அமைய மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லல் என்பதனைவிட அவர்களின் கற்றலில் அக்கறைச் செலுத்த வேண்டும். ஆக்கத்திறனை மேம்படுத்தல்இ அடிப்படை மற்றும் மூன்றாம் நிலைக்கல்வியின் தரத்தினை மேம்படுத்தல்இ வாழ்க்கை நீடித்தக் கல்விக்கான வாய்ப்புக்களை வழங்குதல் எனும் அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்த உதவும் திறன்களான எழுத்தறிவுஇ தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்திறன்களஇ பிரச்சினைத் தீர்த்தல்இ தொடர்பாடல்இ குழுவாகப்பணியாற்றக்கூடிய மென்திறன்கள் என்பனவற்றினை வளர்க்கக்கூடியதாக இக்கல்வி முறைமை வேண்டப்படுகின்றது.

இலங்கையில் எழுத்தறிவு வீதம் நன்கு வள்ர்ச்சிக் கண்டுள்ளது. ஆயினும் அறிவு சார் யுகத்திற்கு இது மட்டும் போதாது. நிலையான பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்தத் தேவையான உழைப்பாளர் தொகுதியினை பிரசுவிக்கும் ஒன்றாக மாற வேண்டும். இன்னும் இலங்கையரின் சராசரிப் பாடசாலை கல்வி மட்டம் 9 ஆண்டுகளாகும். நிலையான அபிவிருத்தியினை நோக்கி துரிதமாகச் செல்ல இம்மட்டம் மேலும் உயர்த்தப்படல் வேண்டும்.

இலங்கைப் பிரதானமாக ஆரம்பக் கல்வியிலும் இடைநிலைக் கல்வியிலும் அதிகக் கவனம் செலுத்தி வருகின்றது. தரமான உயர்க்கல்வி மீதான அக்கறைக்

குறைவானதாகவே உள்ளது. இந்நிலைமை மாற்றப்படல் வேண்டும். மேலும் அண்மைக்காலங்களில் கல்வியின் மீதான அரசாங்கச் செலவு சார்பளவில் குறைந்த வீதத்திலே இருந்து வருகின்றது.

மூன்றாம் நிலைக்கல்வியைப்பொருத்த வரையில் மூன்றாம் நிலைக்கல்வியை வழங்கும் பல்கலைக்கழகத்தினை விட அவையல்லாத நிறுவனங்களின் தொகை அதிகமாகும். இவற்றின் தராதரங்களில் ஏற்றத்தாழ்வுகள் அதிகம். ஆகவே தரமானதும் நிலையான அபிவிருத்தியினை அடையப் பெறுவதற்கான முறைமைகளை உள்ளடக்கிய கற்கை நெறிகளுடன் கூடிய பல்கலைக்கழகங்கள் தோன்ற வேண்டியது அவசியம்.

இன்று இலங்கையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுள் ஒன்றாக கல்வியின் வெளிவாரிச் செயற்பாடு அல்லது தொழில் உலகுடன் கல்விக்குள்ள பொருத்தப்பாட்டின் குறைப்பாடு உள்ளது. முறைசார்க் கல்வியானது பொதுப்படையானதாகவும் தொழில்நுட்பப் பாடங்கள் அல்லாது அறிவுத்துறைகள் சார்ந்ததாகவும் அத்துடன் குறைந்தளவே சந்தை நலங் கருதியதாகவும் காணப்படுகின்றது. அத்தகைய கல்வி முறைமையினால் நிலைப்பேண் அபிவிருத்தியின் மூலம் எதிர்ப்பார்க்கப்படும் நோக்கங்கள் அடைந்துக்கொள்ளப்பட முடியாது சென்று விடும்.

இலங்கை தனது நிதிசார் வளங்களை அதிகளவில் தகவல் தொழில்நுட்பக் கல்வியிலும் கற்பித்தல் தராதரங்களை அதிகரிக்கவும் பயன்படுத்துதல் வேண்டும் என்பது உலக வங்கியின் பரிந்துரையாகும். ஆசிரியர் சம்பளங்கள்,நிருவாகச் செலவுகள் என்பவற்றுக்கு அப்பால் அதிபர்கள்,ஆசிரியர்களின் தொழிற்கைமை விருத்தி மற்றும் கல்விக்கான மூலதனச் செலவு என்பவை அரசாங்கத்தின் முக்கிய பிரச்சினைகளாகும். இந் நிலையில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் ,நூல் நிலையம், செயற்பாட்டறைகள் ,தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் என்பவற்றுக்கான வள ஒதுக்கீடு முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையில் காணப்படும் பரீட்சை கலாசாரம் ஆக்கப்பூர்வமான மாற்றத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ளது என்பது இலங்கையர் அனைவரும் அறிந்த உண்மையே. பரீட்சைகள் இப்போதும் காகித எழுதுகருவி பரீட்சை முறையாக

இருப்பதுடன் ஒரு பாடத்தை கற்பதற்காக பிள்ளை ஒன்று செலவிட்ட பதினொரு வருட கால கற்றற் செயற்பாடுகள் க.பொ.த சா.தரத்தில் மூன்று மணித்தியாலத்தைக் கொண்ட பரீட்சை தாளில் மதிப்பிடப்படுகின்றது. இந்நிலைமை மாற்றற் படல் வேண்டும்.

இலங்கை ஒரு நிலையானப் பொருளாதாரத்தை நோக்கி செல்ல விருப்பங் கொள்ளுமாயின் இலங்கையில் ஏற்படவுள்ள அடுத்தக் கட்ட கலைத்திட்டத்தில் மாற்றத்தில் இப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டியுள்ளது. மேலும் சூழலிற்கு நேயமான கல்வி போதிக்கப்பட வேண்டியதுடன் வினைத்திறனை வளர்க்கக்கூடியதும்இ சிறந்த வள முகாமைத்துவத்தினை போதிக்கக்கூடியதுமான கற்கை நெறிகள் கல்வி முறைமையினுள் உள்வாங்கப்படல் வேண்டியது மிகவும் அவசியம். மாணவர்கள் பொருத்தமற்றவற்றிலிருந்து பொருத்தமான தரவுகளை வேறுப்படுத்தக்கூடியவர்களாகவும்இ உபாய ரீதியான சிந்தனையை விருத்திசெய்வதற்குத் தேவைப்படும் திறன்களிலும் உபதிறன்களிலும் தேர்ச்சிப் பெறுபவர்களாகவும்இ இலக்கைக் குறியாகக் கொண்டு செயற்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் நல்விளைவை உண்டுபண்ணும் ஓர் உற்பத்தியாளனாகவும் நுகர்வோனாகவும் வளங்களின் பயனை உணர்ந்தவனாகவும் சூழலை நேசிப்பவனாகவும் இக்கல்விமுறையினால் பிரசுவிக்கப்படுவானாயின் இலங்கையின் நிலையான அபிவிருத்தி என்பது தொலைத்தூரத்தில் இல்லை".!